1993 ஏப்ரல் 19]

ஆகவே, எந்த ஒரு சூழ்நிலையிலும் அங்கு போகும்போது சிரமம் தான். அதுவும் மழைக்காலங்களில் அந்த ஊருக்குச் செல்வது என்பது இயலாத காரியமாக இருக்கிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த ஊருக்குச் செல்வதற்கு அந்த ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுவதற்கு முன்னுரிமை கொடுத்து, மத்திய சர்க்காருக்கு மீண்டும் உடனடியாக ஒரு பரிந்துரையைச் சொல்லி உடனடியாகக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் இருந்து நேரடியாகச் செல்வதற்கு இந்தப் பாலம் கட்டப்பட வேண்டும் என்றாலும் நான் ஏற்கெனவே தெரிவித்ததுபோல் பெரியார் மாவட்டத்தின் வழியாகச் செல்வதற்கு வழி இருக்கிறது என்றும் சொன்னேன். ஆகவே நாம் அதை சுற்றிச் செல்ல வேண்டி இருக்கிறது என்பதில் இந்த அரசுக்குக் கருத்து மாறுபாடு இல்லை. நேரடியாக ஆற்றின் குறுக்கே சென்றால் மிக எளிதாகச் செல்ல லாம், பொதுமக்களுக்கும் உபயோகமாக இருக்கும் என்பதை இந்த அரசு நன்றாக அறிகிறது. ஆனால் இருக்கின்ற பிரச் சினை எல்லாம் நிதியாதாரங்களைப் பொறுத்தமட்டில் தான் இருக்கின்றன. வேறு ஒன்றும் இல்லை. ஆகவே நான் ஏற் கெனவே தெரிவித்தது போல் இந்த ஆண்டு வருகிற நிதியாதாரத் தைப் பொறுத்து முன்னுரிமை கொடுத்து எடுக்கலாம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 392, திரு. கே. செல்வராஜ், திரு. வி. கே. லட்சுமணன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

392—

போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க கோயம்புத்தூரில் சுரங்கப் பாதைகள் அமைத்தல்.

*11896—திரு. கே. செல்வராஜ்:
திரு. வி. கே. லட்சுமணன் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க கோயம்புத்தூர் காந்திபுரம்—டவுன்ஹால், ஒப்பனக்கார வீதி ஆகிய இடங்களில் சுரங்க நடைபாதை (Sub-way) அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர் களே,

திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

[1993 ஏப்ரல் 19

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை நகரப் பகுதியான ஒப்பனக்கார வீதி, காந்திபுரம், டவுன்ஹால் ஆகிய பகுதிகளில் தினசரி காலை, மாலை நேரங்களில் இலட்சக்கணக்கான மக்கள் நடு ரோட்டுப் பகுதியில் செல்ல வேண்டி இருக்கிற காரணத்தால் அங்கே போக்குவரத்து இடையூறும் விபத்துக்களும் நடந்து வரு கின்றன. எனவே, அதைத் தடுக்கிற விதத்தில் மக்களுக்குரிய நடைபாதையை அங்கே மேல் பாதையாகவோ அல்லது சுரங்கப் பாதையாகவோ அமைக்கிற திட்டத்தை இந்த ஆண்டிலே அரசு கொண்டு வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற திட்டங்களை தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழே அதாவது தமிழ்நாடு அர்பன் டெவலப்மெண்ட் ஸ்கீம் என்ற வகையில் எடுத்துச் செய்து கொண்டிருக்கிறோம். இந்தச் சுரங்கப் பாதையைப் பொறுத்தமட்டில் ரேட் ஆஃப் ரிட்டர்ன் இல்லை என்று திட்ட வல்லுநர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, அங்கே சுரங்கப்பாதை அமைக்கிற சாத்தியக்கூறு இல்லை என் பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காந்திபுரம் பகுதி என்பது சத்தியமங்கலம் சாலை, காஸ்கட் ரோடு, பாரதியார் ரோடு, டாக்டர் நஞ்சப்பா ரோடு ஆகிய மிகப் பெரிய சாலைகள் சந்திக்கின்ற இடம். அங்கே இப்போது போக்குவரத்து நெரிசல் இருக்கிறது என்பது மட்டுமல்ல இன்னும் 30 ஆண்டுகள் கழிகிறபோது, போக்குவரத்து நெரிசல் பல மடங்கு ஆகும் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். எனவே, தமிழக நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக இங்கே சுரங்கப்பாதை கட்டுவதற்கு பரிசிலனை செய்யப் பட்டு வருவதாக அறிகிறேன். அமைச்சர் அவர்கள் முன்னுரிமை அளித்து விரைவில் அதை நிறைவேற்ற ஆவன செய்வாரா என் பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள நடைமுறைப் படி இப்போது இருக்கிற சிக்னல் அமைப்பே போதுமானது என்று அரசு கருதுகிறது. ஆனால், எதிர்காலத்தின் தேவை களைக் கருத்தில் கொண்டு செயலாற்றுகிறபோது இப்படிப் பட்ட திட்டங்களை கோவை, சென்னை போன்ற பெரிய நகரங் களில் ஜன நெருக்கடியை உத்தேசித்து அதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்ற கருத்தும் அரசினிடத்தில் இருக்கிறது. ஆகவே, எதிர்காலத்தில் இப்படிப்பட்ட திட்டங்களை எடுக்கிற போது அவைகளைப் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1993 ஏப்ரல் 19]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூரைச் சேர்ந்த காந்திபுரம், டவுன்ஹால், ஒப்பனக்கார வீதி போன்ற இடங்களில் சுரங்கப் பாதை அமைப்பது இட நெருக்கடி காரணமாக முடியாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அங்கு மக்கள் நெரிசலும் போக்குவரத்துக்கு இடையூறும் இருக்கின்ற காரணத்தால் சுரங்கப்பாதை அமைக்க இடவசதி இல்லை என்று சொன்னாலும், மேம்பாலமாவது கட்டப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுரங்கப் பாதை அமைப்பதுதான் எளிது. மேம்பாலம் கட்டுவதற்கு நிலம் கையகப் படுத்த வேண்டும். அங்குள்ள கடைகள் மற்றும் பல்வேறு பிரச்சினைகள் எல்லாம் வரும். ஆகவே, அது சாத்தியக்கூறான காரியம் அல்ல. ஆகவே இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் சுரங்கப்பாதை அமைப்பதுதான் மிக எளிதான முறை. ஆகவே அதைப் பற்றியே அரசு பரிசிலிக்கலாம் என்று இந்தத் துறை கருதுகிறது.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 393, டாக்டர் ஜி. ஆர். மாலா, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

393—

திருச்சிராப்பள்ளி சந்திப்பு ரவுண்டானா அருகே சுரங்க நடைபாதை கட்டுதல்.

*13841ஏ—டாக்டர் ஜி. ஆர். மாலா :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி ஜங்ஷன் ரவுண்டானா அருகே சுரங்க நடைபாதை கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

திட்டம் ஏதும் இல்லை.